# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2048 • டிசம்பர் 2, 2017 Weekly E-paper • December 2, 2017


# நீதியின் கண்களில் கா(வி)மாலை

● மு.தமிழ் மறவன்



"ஹாதியா" எனும் பெயர் தற்போது பரபரப்பாகப் பேசப்படும் பெயராக மாறிப்போயிருக்கிறது.

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தைச் சேர்ந்த அசோகன் என்பவரது மகள் அகிலா. தான் விரும்பிய இசுலாமிய மதத்திற்கு மாறியதையும், இசுலாமிய மதத்தைச் சார்ந்த ஷபின் ஜகான் எனும் இளைஞரை திருமணம் செய்து கொண்டதையுமே தற்போது மிகப்பெரிய பிரச்சினையாக காட்ட முயல்கிறது பார்ப்பனியம்.

அகிலாவாக இருந்தவர் ஹாதியாவாக மாறியதாலேயே அரசும், இந்துத்வாவும், பார்ப்பனீய ஊடகங்களும், உலகமே அழிந்துவிடுவதைப்போல் துள்ளி குதிக்கின்றன.

ஒருவேளை ஹாதியாவாக இருந்தவர் அகிலாவாக மாறியிருப்பாரானால் "ஆஹா ஓஹோ" வென ஹாதியாவை புகழ்ந்து தள்ளியிருப்பார்கள். ஏன் மெத்தப்படித்தவர்கள் கூட மதம் மாறியதற்காக அவரை மனதாரப் பாராட்டியிருப்பார்கள்!

நான் இப்போது பாதுகாப்பான சூழ்நிலையில் உள்ளேனா என்பதைக் கூட என்னால் கூற முடியவில்லை என ஹாதியா பேட்டி அளித்துள்ளார்.

இதன் பொருள் என்ன? ஏகாதிபத்தியப் பார்ப்பனீயம் தன்னைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறது என்பதையே அப்படிச் சொல்லியிருக்கிறார் ஹாதியா.

இந்த நாட்டில் தான் விரும்புகிற மதமோ, கட்சியோ, வாழ்க்கைத் துணையோ, தொழிலோ எதுவாயினும், அரசியலமைப்பிற்கு உட்பட்டு தேர்ந்தெடுத்துக் கொள்கிற உரிமை, வயதுவந்த (major) ஒவ்வொருவருக்கும் உண்டு. எனினும் பார்ப்பன மனுநீதியை மறுக்கின்ற, எதிர்க்கின்ற அனிதாவாக இருந்தாலும், ஹாதியாவாக இருந்தாலும் இங்கே அவர்களின் குரல்வளை முறிக்கப்படுவதும், உரிமைகள் மறுக்கப்படுவதுமே நடைமுறையாக உள்ளது.

விரும்பி, சட்டப்படி திருமணம் செய்து கொண்ட இருவரை விலக்கி வைத்து, வீட்டுச் சிறையில் அடைப்பது எந்த சட்டத்தின் அடிப்படையில் என்பது புரியவில்லை. ஏனெனில் இங்கே நடைமுறையிலிருப்பது இந்துத்வாவின் பார்ப்பனீய மனுதர்மச் சட்டமே!

இப்படிச் சொல்வதற்கு ஆதாரமுண்டா எனக் கேட்கலாம். இதோ கடந்த 2016 ஆகஸ்ட் மாதம்

கோவை வேளாண் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் காமராஜ்–சத்தியஜோதி தம்பதியினர் தங்களின் இரு மகள்களான கீதா, லதாவை ஜக்கிவாசுதேவ் மூளைச்சலவை செய்து போதைப்பொருள் கொடுத்து மயக்கி மொட்டை அடித்துத் துறவரம் எனச் சித்ரவதை செய்கின்றார். எங்கள் மகள்களை மீட்டுத்தாருங்கள் எனக் கதறினரே! நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனரே! நினைவிருக்கிறதா?

அப்போது நாங்கள் மேஜர் எங்களுக்குத் துறவறத்தைத் தேர்தெடுத்துக் கொள்ள எல்லா உரிமையும் இருக்கிறது எனச் சொன்ன கீதா, லதாவின் பதிலை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், ஹாதியாவின் நியாயமான கோரிக்கைகளை செவிமடுக்கத் தயாராகவே இல்லை.

அறிவுக்குப் பொருந்தாத பொய்ப் புகாரின் அடிப்படையில் தன்னிடம் ஒரு கைபேசிகூட இல்லாத ஹாதியாவை, ஐ.எஸ் தீவிரவாதியா என தேசியப் புலனாய்வு ஆய்வு செய்ய உத்தரவிட்ட நீதிமன்றம், ஜக்கியின் ஈஷா மையம் குறித்த விசாரனையை மட்டும் கண்டும் காணாமல் கடந்துவிட்டதை மறக்க முடியுமா?

ஹாதியாவின் இசுலாமிய தோழிகளின் தந்தை, கணவர், நட்புகள் என அனைவரையும் விசாரனை, கைது என அலைக்கழிக்கும் அரச பயங்கரவாதம் ஜக்கியின் அறுந்த கால் செருப்பைக் கூடத் தொட்டுப் பார்க்க இயலவில்லை என்பதே கசப்பான உண்மை.

இந்தியாவில் அதிகார வர்க்கமான பார்ப்பனீயமும், அதன் சேனைகளும் ஒடுக்கப்பட்ட மக்களையும், பெண்களையும், இசுலாமியர்களையும் எப்படிப் பார்க்கிறது, நடத்துகிறதென்பதைத் தெளிவாக உணரும் தருணமிது.

நீதிமன்றம் கருணையோடு!!! உனக்கு என்ன தேவை? எனக் கேட்டபோது

"என்னைச் சுதந்திரமாக வாழவிடுங்கள்" என்ற ஹாதியாவின் முழக்கம், எழுபதாண்டுகால சுதந்திரநாடு என்பது 'இந்து ராஷ்டிர'த்தின் மறு உருவமென்பதை அம்பலப்படுத்துகிறது.

"ஓர் இளம் பெண் நள்ளிரவில் அச்சமேதுமின்றி தன்னந்தனியாக என்று நடமாட முடிகிறதோ அன்றே பூரண சுயராஜ்யம் பெற்றவர்களாவோம்" என்ற காந்தியார் உயிருடன் இருந்திருப்பாரானால் இந்திய கட்டமைப்பின் மீது காறி உமிழ்ந்திருப்பார்!

ஆம் தோழர்களே!

**'நமது அசோக சக்கரத்தின்**
**நான்கு சிங்கங்கள்**
**மிகவேகமாக**
**ஓநாய்களாக மாறிவிட்டன"**

எனும் மனுஷ்யபுத்திரனின் வார்த்தைகளே நிழலாடுகின்றன.

அத்துனை இந்துத்வா ஓநாய்களின் வெறிபிடித்த ஓலத்திலும் கலங்காமல் "என் கல்விக்கு நீங்கள் என்ன செலவு செய்வது? என் கணவர் இருக்கிறாரே" என்ற ஹாதியாவின் குரல் ஓங்கி மதவெறியின் செவிட்டில் அறைந்தற்கு ஒப்பாகும்.

சமூக நீதிக்கெதிரான பார்ப்பனீயத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக என்றென்றும் அனிதாக்களும், ஹாதியாக்களும் கிளர்ந்தெழுவார்கள்! அவர்களுக்குத் துணையாகத் தந்தை பெரியாரும் பயணித்துக் கொண்டேயிருப்பார்.

சட்டப்பூர்வமாக நமது உரிமைகளை பெற முடியும். நீதிமன்றத்தின் மூலம் நீதியை நிலை நாட்டி விடலாம் என்ற கனவுக்கோட்டையைத் தகர்த்தெறிந்துவிட்டு, உறுதியான போராட்டத்தின் மூலமே நமது உரிமைகளைப் பெற முடியும் எனும் பெரியாரியப் பாதையைத் தேர்ந்தெடுக்கிற சூழலைப் பெரியாரியல் வார்த்தெடுக்கும்!

திராவிட மண்ணிலிருந்து புறப்படும் பெரியாரின் புரட்சிகரச் சிந்தனைகளை எதிர்கொள்ள நேரிடும் பார்ப்பனீயத்தின் நிலை இனி வீழ்ச்சியடையும். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## கலைஞர் உதவியாளர் இல்லத் திருமணம்



**த**லைவர் கலைஞர் அவர்களின் உதவியாளர், நித்யா அவர்களின் இல்லத் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார் கழகச் செயல்தலைவர் தளபதி. மணமேடையில் ஜெகத்ரட்சகன், சுப.வீரபாண்டியன், துர்கா ஸ்டாலின், துரைமுருகன், பொன்முடி, ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், இ.கருணாநிதி ஆகியோர்.

## மாவீரர் நாள்




**ந**வம்பர் 27 - விடுதலைச் சிறுத்தைகள் நடத்திய மாவீரர்களின் வீரவணக்க நாள் நிகழ்வில் சிறுத்தைகளின் தலைவர் தொல்.திருமாவளவன், பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன்.

## அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கு!



**26.11.2017** அன்று, சென்னை பெரியார் திடலில், தமிழர் தலைவர் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற, அனைத்துச் சாதியினரையும் அர்ச்சராக்க வலியுறுத்தி நடைபெற்ற மாநாட்டு மேடையில்...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஐயோ தமிழுக்கு ஆபத்து

**ஓ**ர் இனத்தின் மொழியை அழித்தால், அந்த இனம் அழிந்துபோகும்.

அந்த வேலையில் இப்பொழுது மத்திய பா.ஜ.க. அரசு இறங்கித் தமிழை அழிக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது.

அதற்குத் துணையாக இன்றைய அ.தி.மு.க.வின் எடப்பாடி அரசும் ‘எட்டப்ப’ வேலையைச் செய்து கொண்டிருக்கிறது.

அண்டைய இரு மாநிலங்களான கேரளா, கர்நாடகம் அந்தந்த மாநில மொழிகளையே பாடத்திட்டத்தில் கட்டாயமாக்கி இருக்கின்றன.

ஆனால் தமிழகத்தின் நிலை அது அன்று.

தமிழை ஒரு பாடமொழியாகப் படிக்காமலேயே பட்ட மேற்படிப்பை முடித்திட முடியும் என்ற அவல நிலை இந்த அரசால் ஏற்பட்டுள்ளது.

2006 தி.மு.கழக ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டப்படி 2006-2007 ஆம் கல்வியாண்டில் முதலாம் வகுப்பில் தமிழ் கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டது.

இது படிப்படியாக உயர்ந்து 2015-2016ஆம் ஆண்டின் பொதுத் தேர்வில் தமிழைக் கட்டாயப் பாட மொழியாக ஆக்கிப் பகுதி ஒன்றில் எழுத வகை செய்யப்பட்டது.

11 ஆண்டுகளுக்குப் பின்னர் மொழிச் சிறுபான்மை மாணவர்களுக்கும், பிற மொழி மாணவர்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று கூறி தமிழை நசுக்கும் வேலையை செய்திருக்கிறது எடப்பாடி பினாமி அரசு.

ஆதாவது மொழி சிறுபான்மையினர், பிற மாநிலத்திலிருந்து வருபவர்களுக்கு வசதியாகத் தமிழை கட்டாயப் பாடமாக இல்லாமல் செய்துவிட்டார்கள்.

அதுபோன்ற சட்டம் வடநாட்டில் உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத் போன்ற எந்த மாநிலத்திலும் இல்லை. ஆனால் ஏன் தமிழ்நாட்டில் மட்டும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது அ.தி.மு.க. அரசு?

தமிழைப் படிக்காமலேயே தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுப் பிற மொழி மாணவர்கள் பட்டதாரிகள் மாணவர்களாக உருவாக்கப்படுகிறார்கள் தமிழ்நாட்டில்.

இதன் மூலம் தமிழ்மொழி மாணவர்கள் இரண்டாம் தர மூன்றாம் தரத்தவர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் அரசுத் தேர்வாணையத்தில் வடநாட்டுக்காரர்கள் திணிக்கப்படுகிறார்கள்.

இரயில்வேயில் வடநாட்டவர்களே பெரிதும் வலிந்து பணியமர்த்தப் படுகிறார்கள்.

அரசு மருத்துவமனைகளில் கூட இப்பொழுது வடநாட்டுப்பணியாளர்களின் ஆதிக்கம் பெருகிக் கொண்டிருக்கிறது.

அனைத்துத் துறைப் பணிகளில் தமிழ்நாட்டில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் பா.ஜ.க.வின் எடுபிடி அரசாக இருக்கும் எடப்பாடி அரசு, கல்வித் துறையில் தமிழை ஒழித்துப் பா.ஜ.க.வுக்கு துணை போகும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறது.

இது வன்மையான கண்டனத்திற்கு உரியது.

மொழி அழிந்தால் இனம் அழியும்.

மக்கள் இதை மறக்கக் கூடாது.

தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும் என்ற புரட்சி கவிஞர் பாரதிதாசனாரின் பொருளார்ந்த வரிகளைத் தமிழகம் மறந்து விடக்கூடாது.

மறக்க முடியுமா?

## சொல்லின் செல்வர்

# இரா.பி.சேதுப்பிள்ளை

● எழில்.இளங்கோவன்

கவியோகி சுத்தானந்த பாரதியார் ஒருவரை இப்படிப் பாராட்டுகிறார்: “செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை. தமிழின் இன்பம் நுகர வேண்டுமானால், சேதுப்பிள்ளையின் செந்தமிழைப் படிக்க வேண்டும்”.

யார் இந்தச் சேதுப்பிள்ளை?

“தமிழறிஞர்களுள் மிகச் சிறந்த நாவீறு படைத்தவராக விளங்கியவர் ‘சொல்லின் செல்வர்’ இரா.பி.சேதுப்பிள்ளை. சொல்மாரிச் செந்தமிழ்ச் சொற்கள் நடம் புரியும். எதுகையும் மோனையும் பண்ணிசைக்கும். சுவைதரும் கவிதைகள் மேற்கோளாகும். எடுப்பான நடையில் நின்று, நிதானித்து அவரின் சொற்பொழிவு இருக்கும்.” இப்படி அறிமுகம் செய்கிறார் சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளையை, பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்.

1896ஆம் அண்டு திருநெல்வேலி மாவட்டம் இராசவல்லிபுரம் என்ற ஊரில் மார்ச் 2ஆம் தேதி பிறந்தார் இரா.பி.சேதுப்பிள்ளை.

இவரின் அன்னையார் பெயர் சொர்ணம்மாள். தந்தையார் பிறவிப்பெருமாள் பிள்ளை.

ஐந்து வயதுக்குமேல், அக்கால வழக்கப்படி இவரின் கல்வி திண்ணைப் பள்ளியில் இருந்தே தொடங்கியது.

அதைத் தொடர்ந்து இராசவல்லிபுரம் செப்பறைத் திருமடத்தின் தலைவர் அருணாசல தேசிகரிடம் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், தேவாரம் திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றார்.

அதன்பின் பாளையங்கோட்டை தூயசேவியர் உயர் நிலைப்பள்ளியில் இவரின் தொடக்கக் கல்வி அமைந்தது.

நெல்லை இந்து கல்லூரியில் இவர் இடைநிலைத் (இன்டர்மீடியட்) தேர்வில் தேறினார்.

இளங்கலைப் பட்டத்தைச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று பெற்றார்.

அன்று இவர் படித்த தூயசேவியர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் சுப்பிரமணியமும், இந்து கல்லூரி பேராசிரியர் சிவராமனும் இவரின் தமிழார்வம் வளரத் தூண்டுகோலாக இருந்தனர்.

தொடர்ந்து சென்னை சட்டக்கல்லூரியில் சேர்ந்து வழக்கறிஞர் தேர்வில் தேறினார்.

1923ம் ஆண்டு நெல்லையில் வழக்கறிஞராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டு பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுது இவர் நகர் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு அதிலும் பணியாற்றியுள்ளார்.

ஆயினும் வழக்கறிஞர் தொழிலில் நாட்டமில்லா இவர் தமிழை ஆய்வு செய்யவும், அதுகுறிந்து இலக்கிய மேடைகளில் பேசவும் தொடங்கினார்.



இவர் படித்த பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியாக இருந்த இவரை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பேராசிரியராக அமர்த்தியது.

அப்பல்கலைக் கழகத்தில் அறிஞர் பெருமக்களான விபுலாநந்த அடிகளார், சோமசுந்தர பாரதியார் ஆகியோரிடம் ஆறு ஆண்டுகள் பணி புரிந்து தன் தமிழ் அறிவை, புலமையை வளர்த்தெடுத்தார்.

1936ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பேராசிரியராகப் பொறுப்பேற்ற சேதுப்பிள்ளை அங்கு ஆய்வுத்துறைத் தலைவராக இருந்து பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் கீழ் பணியாற்றினார்.

வையாபுரியார் தலைமையில் தொகுக்கப்பட்டுவந்த தமிழ்ப் பேரகராதிப் பணியில் பெரிதும் பங்காற்றினார் இவர். வையாபுரியாரின் ஓய்வுக்குப்பின்னர், அப்பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செயலாற்றியவர் சேதுப்பிள்ளை.

இவரின் முயற்சியினால் ‘திராவிடப் பொதுச் சொற்கள்’ ‘திராவிடப் பொதுப் பழமொழிகள்’ ஆகிய இரு நூல்களை அப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

இவர் பேராசிரியராகப் பணியாற்றிய காலங்களில் இவர் தன் தமிழ்ப் பேச்சு நடையால் மாணவர்களை ஈர்த்தார். இளங்கலை மாணவர்களிடம், தமிழ் மொழி நூலை ஆங்கிலத்தில் கற்பிக்கும் ஆற்றலுடன், மாணவர்களின் அறிவாற்றலைத் தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் வளர்த்தெடுத்தார்.

குறிப்பாக, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி மாணவர்களுக்கு ஆராய்ச்சி குறித்த கல்வியைச் செழுமைப்படுத்தச் சிறப்பு வகுப்புகள் எடுத்து வந்துள்ளார்.

இரா.பி.சேதுப்பிள்ளை எழுதிய முதல் நூல் ‘திருவள்ளுவர் நூல் நயம்’. தலை சிறந்த இவரின் ஆய்வு நூல் ‘ஊரும் பேரும்’.

இவரால் எழுதப் பெற்ற நூல்கள் ஏறத்தாழ 34 இதில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் 3.

இவரால் பதிப்பிக்கப் பெற்ற நூல்கள் 4.

வானொலியில் ஆற்றிய சொற் பொழிவுகளின் பல, இவரின் நூல் தொகுப்புகளாயின.

பல்வேறு இலக்கியக் கூட்டங்களில் ஆற்றிய இவரின் உரைகளின் தொகுப்புகளும் நூல் வடிவங்கள் பெற்றுள்ளன.

சிலப்பதிகார நூல்நயம், தமிழின்பம், தமிழ் வீரம், தமிழ் விருந்து, வேலின் வெற்றி, வேலும் வில்லும், வழி வழி வள்ளுவர், தமிழ்க் கவிதைக் களஞ்சியம், செஞ் சொற்கவிக்கோவை, ஆற்றங்கரையினிலே ஆகிய இவரின் நூல்கள் குறிப்பிடத்தக்கன.

இதில் ‘தமிழின்பம்’ என்ற நூல், மத்திய அரசின் சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளது.

இவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பெற்றுள்ளன.

அடுக்குமொழி, எதுகை மோனை, உவமைநயம், இலக்கியத் தொடருடன் அமையும் இவரின் பேச்சால் சொக்கிப்போனவர்கள் ஏராளம்.

சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் கம்பராமாயணம் குறித்து மூன்று ஆண்டுகள் நடைபெற்ற சொற்பொழிவுகளில் சேதுப்பிள்ளையில் சில சொற்பொழிவுகள் குறித்து அப்போது தமிழறிஞர்கள் புகழ்ந்து பேசியுள்ளார்கள்.

அதன் தாக்கம்தான் சென்னையில் கம்பன் கழகம் உருவானது.

சென்னை கோகலே மன்றத்தில் சிலப்பதிகாரம் குறித்து ஆற்றிய உரையின் மாட்சியை, இவரின் சிலப்பதிகார நூல்நயம் என்ற நூலில் காணலாம்.

சென்னை தங்கசாலை தமிழ் மன்றத்தில் 5 ஆண்டுகள் இவர் திருக்குறள் வகுப்பு நடத்தியிருக்கிறார் என்பது குறிக்கத்தக்க செய்தி.

இவரின் பேச்சாற்றல் சொல்லாற்றலைக் கண்ட தருமபுர ஆதினம் இவருக்குச் ‘செல்லின் செல்வர்’ என்ற பட்டத்தை வழங்கியது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 25 ஆண்டுகள் சிறப்பாகத் தமிழ்ப் பணி ஆற்றிய சேதுப்பிள்ளைக்கு ‘முனைவர்’ பட்டம் வழங்கியதோடு, வெள்ளி விழாவும் எடுத்து, கூடுதலாக ‘இலக்கியப் பேரறிஞர்’ என்ற பட்டத்தையும் அப்பல்கலைக்கழகம் வழங்கியுள்ளது.

“இரா.பி.சேதுப்பிள்ளையின் மொழிநடை ஆங்கில அறிஞர் ஹட்சனின் நடைபோன்றது” என்று வியந்து கூறுகிறார் சோமலே.

இப்படிப்பட்ட அறிஞர் பெருந்தகை, சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் 1961 ஏப்ரல் 25ஆம் நாள் இயற்கை எய்தினார்.

அப்போது அவருக்கு வயது 65தான்.

●

# கண்ணீரில் தவிக்கும் கன்னியாகுமரி

ஓகிப் புயல் ஒரு வழியாக மாற்றிப் போட்டு விட்டது குமரி மாவட்டத்தை. 2004ஆம் ஆண்டு சுனாமிக்கு பிறகு, மீண்டும் ஒரு பேரிடரை அம் மாவட்டம் சந்தித்துள்ளது.

10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்பொழுது புயலின் வேகம் கூடியிருப்பதாகச் சொல்கின்றனர். அதனால் பல்வேறு உலக நாடுகள் வரவிருக்கும் புயல்களை எப்படி எதிர்கொள்வது என்ற ஆராய்ச்சியில் இறங்கியுள்ளன. ஆனால் நாம் அந்த உண்மையையே இன்னும் உணராமல் இருக்கிறோம். அதனால்தான் பேரிடர் நிவாரணப் பணிகள் இங்கு ஆமை வேகத்தில் அசைகின்றன.

இந்தப் புயலில் நெல்லை மாவட்டத்தின் எல்லையில் இருக்கும் பணகுடி என்னும் ஊர் ஏறத்தாழ வெள்ளத்தில் மூழ்கி விட்ட காட்சியைத் தொலைக்காட்சிகள் காட்டின. கன்னியாகுமரி, நாகர்கோயில் ஆகிய ஊர்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. ஏறத்தாழ 25 ஆயிரம் மரங்கள் சாய்ந்து கிடக்கின்றன. ஊரே இருளில் மூழ்கி இருக்கிறது.

ஒரு பக்கம் நீரின்றித் தவிக்கிறது நாடு. மழை கொட்டிக் கொடுத்தாலும் அதைச் சேமிக்க வழியின்றி அனைத்து நீரையும் கடலுக்கு அனுப்பிக்கொண்டு இருக்கிறோம் நாம். சேமிப்பு வழிமுறைகள் சரியாக இருக்குமானால், நாட்டில் வறட்சியும் வெள்ளமும் இருக்காது.

இப்போது இரண்டும் இருக்கிறது. மக்கள் வாழ்வில் நிம்மதிதான் இல்லை.

# வீரவணக்கம்



மனுசங்கடா... நாங்க மனுசங்கடா என்னும் பாடலின் மூலம் சமூகத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்பிய மக்கள் கவிஞர் இன்குலாப், சென்ற ஆண்டு டிசம்பர் நம்மை விட்டு மறைந்தார். கவிஞராய், பேராசிரியராய், நாடகப் படைப்பாளியாய் – எல்லாவற்றையும் தாண்டி ஒரு சமூகப் போராளியாய் வாழ்ந்த தோழர் இன்குலாபின் மரணம், என்றென்றும் ஈடுசெய்ய முடியாத இழப்பே ஆகும்.

மக்கள் கவிஞருக்கு நம் வீரவணக்கம்.

# திராவிட இயக்கத் தமிழர் பேரவை

**மகளிர் அணி சார்பில்**

**கருத்தரங்கம்**

## "இன்றைய அரசியல் - அறிவியல் - பெண்கள்"

நாள்: 10.12.2017 ஞாயிறு மாலை 06.30 மணி

இடம் : மாண்டபோர்ட மெட்ரிகுலேஷன் பள்ளி, படேல் சாலை, பெரம்பூர், சென்னை

• வரவேற்புரை •

**தோழர் நித்யா**

• தலைமை •

**தோழர் மகாலட்சுமி**

(மாநில மகளிர் அணிச் செயலாளர்)

• முன்னிலை •

**தோழர்கள் மு.மாறன், முத்தையா குமரன், தமிழ்மறவன், எட்வின், மகேஸ்வரி, தென்றல், சபானா, ஸ்ரீவித்யா**

• கருத்துரை •

**தோழர் சுப. வீரபாண்டியன்**

**திரு வசந்தி ஸ்டான்லி**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

**தோழர் லதா ராணி**

• நன்றியுரை •

**தோழர் ஜனனி**

• தொகுப்புரை •

**தோழர் மணிகண்டன்**

அனைவரும் வருக!



# வாழ்த்துகிறோம்



1944ஆம் ஆண்டு கடலூரில் நடைபெற்ற மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களை முதன்முதலாகச் சந்தித்து, தன் 11ஆவது வயதில் திராவிடர் கழகத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட சிறுவன் சாரங்கபாணி, இன்று வளர்ந்து, 75 ஆண்டு காலம் பொதுத் தொண்டாற்றி, திராவிடர் கழகத்தின் தலைவராக உயர்ந்திருக்கிறார். ஆம், தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களே அன்றைய சிறுவன் சாரங்கபாணி. டிசம்பர் 2ஆம் நாள் 85ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கும் ஆசிரியரை திராவிட இயக்கத் தமிழர் பேரவை வாழ்த்தி மகிழ்கிறது.



# பேரவைத் தலைமைக்குழுக் கூட்டம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமைக்குழுக் கூட்டம், 10.12.2017 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னையில் உள்ள பேரவையின் தலைமை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சி நிரல்:

1. இன்றைய அரசியல் நிலவரமும், ஆளுநர் தலையீடும்
2. ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்
3. புதிய சிறுநூல்கள் வெளியீடு
4. ஏனைய பிற

தலைமைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

– சுப.வீரபாண்டியன்
(பொதுச் செயலாளர்)

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.